1984 மார்ச் 5]

(ஈ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

(உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

(ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

அத்தோடு இன்னும் 3 மசோதாக்கள் இது குறித்தே இருக்கின்றன. ஆகவே நான்கையும் இங்கே சேர்த்து ஒன்றாக எடுத்துக் கொள்வதால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும். ஏனென்றால் ஏற்கெனவே பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றியும், நகராட்சித் தேர்தல்கள் பற்றியும் ஆளுநர் உரையிலேயே தேதிகள் குறிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு விட்டன. அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதிகமான பேச்சுக்கே இதில் இடம் இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே, பேச்சே கூட இல்லாமல் இவைகளை நிறைவேற்றித் தரலாம் என்று நான் மாண்புமிகு தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் எல்லா வேலைகளும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன் (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : பஞ்சாயத்து நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இரண்டும் வெவ்வேறானவை. ஆகவே, பஞ்சாயத்து தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். நகராட்சிகள் தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இரண்டிலும் சட்ட வேறுபாடுகளும், நிலைமை வேறுபாடுகளும் இருக்கின்றன. நகராட்சிகள் பற்றித் தனியாக செய்திகள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள் பற்றித் தனியாக செய்திகள் இருக்கின்றன. ஆகவே, தனித்தனியாக (குறுக்கீடு).

Sorry, we are objecting....

தனித்தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற எங்களுடைய கருத்தை சபாநாயகரிடம் சொல்கிறோம். ஏற்கெனவே அப்படிப்பட்ட மரபுகள் நம்முடைய அவையிலே கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன.

** 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(முற்பகல் 11—50)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) : சில நேரங்களிலே ஒன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒன்றாக எடுத்துக்கொண்டு பேசுகிறவர்கள் ஒன்றாகப் பேசிக்கொள்ளலாம். ஓட்டெடுப்பிற்கு வருகிறதுபோது தனித்தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. துரைமுருகன் : ஊராட்சிகளின் நிலைமை வேறு, நகராட்சிகளின் நிலைமை வேறு, தங்களுக்குத் தெரியும். 'யு ஆர் வெல்-நோன் லெனர்டு லாயர்'.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்றாக எடுத்துக் கொண்டால் நேரம் மிச்சமாகும். சீக்கிரமாக முடித்துவிடலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தனித்தனியாக எடுத்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே நேரத்தின் அருமையைக் கருதி விரைவிலே் முடிக்கவேண்டுமென்று சொல்லி, நாங்கள் தேதியையே அறிவித்து விட்டோம், ஆகவே பேசாமலே நிறைவேற்றலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு குறைந்த பட்சம் ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உள்ள நிலைமைகளைச் சொல்வதற்கு அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முடியும். அப்படி ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு பயன் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறைபாடுகளைப் பற்றி எல்லாம் அந்த மானியத்திலே பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது வரையிலே இந்த மாமன்றத்தில் இந்த மசோதாக்கள் வருகிற நேரத்திலே ஒன்றாக எடுத்துக்கொண்டு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே தேதிகள் அறிவிக்கப்பட்டு உடனடியாக தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) எப்போது நாமினேஷன் போட வேண்டும். எப்போது அறிக்கை கொடுக்கப்படும் என்பதையெல்லாம் நான் இப்போது சொல்லப்போகிறேன்.

1984 மார்ச் 5)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தாங்கள் தீர்ப்பு சொல்லி விட்டீர்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு மட்டுமல்ல, இம்மாதிரி எல்லாவற்றிற்கும் சொல்லி உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட 3 சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம். நகராட்சி பற்றிய சட்ட முன் வடிவை தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

*திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக் கூடிய தீர்மானத்தின் மீது நான் சார்ந்து இருக்கின்ற இந்திய தேசீய காங்கிரஸ் சார்பில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களது குறிப்பில் கூறினார்கள்: 1979 ஆம் ஆண்டிலிருந்து பல முறை இந்த தனி அதிகாரிகள் கால நீட்டிப்பை கேட்டு வந்து இருக்கிறார்கள் என்று. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருசிறந்த வழக்கறிஞர் என்பது நாடு அறிந்த உண்மை. நாம் கோர்ட்டில் வாய்தா வாங்குவதைப் போல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்று தனி அதிகாரிகள் நியமனத்தை அடிக்கடி தள்ளிப் போட்டுக்கொண்டு வருவது சாலச் சிறந்தது அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களில் பல முறைகேடுகள் நடந்து கொண்டு இருப்பது நாடு அறிந்த விஷயம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் இல்லாததால் பஞ்சாயத்து போர்டு ஆனாலும் சரி, பஞ்சாயத்து யூனியன் ஆனாலும் சரி, அங்கு எல்லாம் பல

** 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.